சிபார்சு வந்து அநேகம் பேர்களுக்கு சம்பளம் உயர்த்தப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் அமுலுக்கு வந்தபிற்பாடு யோசிக்கலாம்.

SRI K. ANBAZHAGAN: கிராம சிப்பந்திகளை முழு நேர ஊழியர்கள் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். முழு நேர சர்க்கார் ஊழியர் என்றால் குறைந்தபட்சம் 60 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று பே கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: முழு நேர ஊழியர் கள் என்று நான் சொல்வதும் சப்ஜெக்ட்டு கரெக்ஷன் தான். ஞாபகத்தில் இருந்து சொல்கிறேன்.

SRI J. MATHA GOWDER: கிராம ஊழியர்களுக்கு சென்ற சில ஆண்டுகளுக்கு முன் உடுப்பு கொடுக்கப்பட்டது. அப்புறம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. வருடா வருடம் உடுப்புகளையாவது கொடுப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: தனியாகக் கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI T. IRUSAPPAN: கிராம கோட்டி, தலையாரி முதலிய வர்கள் கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லப்படு கிறது. முன்காலத்தில் அவர்களுக்கு மானியம் கொடுத்திருந் தார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க பரிசீலனை செய்தால் நலமாக இருக்காதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது ஒரு பெரிய பிரச்னை. மேலும் பண விஷயம் கலந்திருக்கிறது. கேள்வி மூலமாக இதற்குச் சரியான பதில் கொடுக்க முடியாது.

MR. SPEAKER: கேள்வி 603, 604 ஆகிய இரண்டுக்கும் சேர்த்து பதில் அளிக்கும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Buckingham Canal

*603 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பக்கிங்ஹாம் கால்வாயை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு திட்டத்தை மாற்றி (revised estimate) அனுப்பும்படி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார் களா?

(ஆ) அப்படியானால் முதலில் போட்ட திட்டச் செலவு எவ்வளவு? மாற்றி அமைக்கப்பட்ட திட்டச் செலவு எவ்வளவு?

10th September 1960]

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) Estimated cost of the proposals sent by this Government—Rs. 60 lakhs.

Provision proposed to be made by the Government of India in Third Five-Year Plan—Rs. 10 lakhs.

*604 Q.—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பக்கிங்ஹாம் கால்வாயைப் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனை யில் இருக்கிறதா?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The details of the works contemplated are—

(1) Purchase of a dredger for carrying out dredging in the Buckingham Canal and the maintenance of a uniform draft depth by drawing up a scheme in consultation with the Government of Andhra Pradesh;

(2) Provision of terminal facilities on Buckingham Canal at Madras;

(3) Improvements to Buckingham Canal and its Low paths; and

(4) Maintenance of the Buckingham Canal in a fit condition for navigation.

SRI S. M. ANNAMALAI: அறுபது லட்சத்திலிருந்து பத்து லட்சமாகக் குறைக்கப்பட்ட காரணத்தினால் விடப்பட்ட திட்டங்கள் யாவை? ஏன் அந்தப் பணம் குறைக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN: நாம் 60 லட்சம் திட்டம் போட்டோம். மத்திய சர்க்கார் பத்து லட்சத்திற்குத்தான் ஒத்துக்கொண்டார்கள். அது போதாது, மேலும் 30 லட்சம் கொடுக்கவேண்டும் என்று சீப் இன்ஜினியர் சொல்லியிருக் கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

SRI P. G. MANICKAM: நம் அரசாங்கத்தினால் போடப் பட்ட எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எஸ்டிமேட் போட்டுத் தானே 60 லட்சத்திற்கு மத்திய சர்க்காருக்கு அனுப்பிற்று? அப்படியும் பத்து லட்சமாக ஏன் குறைத்தார்கள்? அதிகப் படியான பாக்கித் தொகையும் வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN: இன்னும் முப்பது லட்ச மாவது வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.